ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

अरे मूढ त्वं किं हृदयविषयाग्नौ फलधिया
निपत्य द्राक् साकं शलभ इव सर्वेन्द्रियगणैः ।
अपारं दुःखं तद्वहसि सततं चित्सुखमयं
भवानीशं ध्यात्वा भज निजजनेरुत्तमफलम् ॥ २९ ॥

அரே மூட த்வம் கிம் ஹ்ருதயவிஷயாக்னௌ பலதியா
நிபத்ய த்ராக் ஸாகம் சலப இவ ஸர்வேந்த்ரியகணை: ।
அபாரம் து:கம் தத்வஹஸி ஸததம் சித்ஸுகமயம்
பவானீசம் த்யாத்வா பஜ நிஜஜனேருத்தமபலம் ॥ ௨௯ ॥

ஹே மூட ஹ்ருதய ! ஹே அறிவில்லாத மனமே ! விஷயமென்கிற அக்னியில் சிறந்த பலம் ஏற்படும் என்கிற எண்ணுடன் ஸகலமான இந்திரியஸமூஹங்களோடுகூட சலபமென்று பெயர்வாய்ந்த ஒரு வண்டானதுபோல் சீக்கிரமாக விழுந்து சொல்லவொண்ணாத துக்கத்தை அடைகிறாய் இதைவிட்டு ஞானஸுகஸ்வரூபமாய் விளங்கும் பார்வதி நாதனைத் தியானம்செய்து உன்னுடைய ஜன்மாவிற்குப் பெறவேண்டிய உத்தமமான பலத்தை அடைவாயாக.

ஒருவன் ஸ்ரீ பகவானுடைய ஸ்வரூபத்தைத் தியானம் பண்ணாமல் விஷயஸுகத்தைப் பெரிதாய்க் கருதிக் கண்டவிடங்களிலெல்லாம் சுற்றும் தம் மனதைப்பார்த்து அடியில் வருமாறு கூறுகின்றான்.' ஹே 'மூடமனமே! இது நமக்கு துக்கத்தைக் கொடுக்கும் இது ஸுகத்தைக் கொடுக்குமென்கிற பகுத்தறிவின்றி நன்கு பிரகாசித்துக்கொண்டிருக்கும் விளக்கில் இது சிறந்த பலமெனக்கருதி அடையவிழும் வண்டுபோல் விஷயமென்கிற அக்னியில் அதிகமான பலத்தை யடையவிரும்பி இந்திரியங்களோடுகூட விழுந்து வீணில் ஜன்மாவைக் கெடுத்துக்கொள்ளாதே• எப்பொழுதும் அழிவில்லாத உத்தமமான மோக்ஷஸுகத்தையளிக்கும் ஸ்ரீ பரமேச்வரனைத் தியானித்து உன் ஜன்மாவையும் பயனுள்ளதாகச்செய் என்று ஹிதமாய் உபதேசிக்கின்றான்.•

சுபம்.

உபபத்திராதிபர்,

674

ஆர்ய தர்மம்.

விபவ-ஞு மார்கழி-மீ ௨௭௨

# வேதாந்த ஸார ஸங்கிரஹம்.

(502-வது பக்கத்தொடர்ச்சி)

சிஷ்:— ஸுஷுப்தியும் முக்திக்கு ஸமானமாயிருப்பின் அதையும் முக்தி என்று ஏன் சொல்லக்கூடாது?

குரு:— ஸுகானுப மாத்திரத்தால் ஸமானமாக இருந்தாலும் ஸுஷுப்தியில் அஞ்ஞானம் மறுபடியும் திரும்புவதும் உண்டு. முக்தியில் இவ்விரண்டும் கிடையாது. ஆகையால் ஸுஷுப்தியை முக்தியென்று சொல்லக்கூடாது. இக்காரணத்தால்தான் பிரளயத்தையும் முக்தியென்று கூறுகிறதில்லை. ஸுஷுப்திஸுகத்தைப்போல் முக்திஸுகம் ஸ்வானுபவத்தில் அறியப்படுகிறபடியால் பிரத்யக்ஷம்தான் சூன்யமில்லை.

சிஷ்:— இவ்விதம் கூறினால் சரீரத்துடனடையப்படும் முக்தி போல் சரீரமில்லாமலடையப்படும் முக்தியும் பிரத்தியக்ஷமானால் இவ்விரண்டிற்கும் பேதம் என்ன?

குரு:— விலகிப்போன அஞ்ஞானம் மறுபடியும் திரும்பாமலிருப்பது என்பதே பேதமாகும். இவ்விதம் கூறப்பட்ட ச்ருதியுக்திகளால் அசரீரமுக்திக்கு சிறந்த ஸுகமும், சரீரத்தை ஸ்வீகரித்தால் துக்கமும் ஏற்படுமென்று அறிவிக்கப்படுகிறது. இப்பொழுது அனுபவத்தினாலும் இவ்விரண்டையும் நிரூபிக்கிறோம். எப்பொழுதும் ஸுஷுப்தியில் சரீரபரிக்ரஹமில்லாதபடியால் துக்கமில்லை என்கிறதையும் ஜாக்ரத் ஸ்வப்னாவஸ்தைகளில் சரீரத்துடனிருப்பதால் துக்கத்தையும் நாம் எல்லாரும் அனுபவிக்கிறோம். ஆகையால் எந்தெந்த ஸமயத்தில் சரீரபரிக்கிரஹம் ஏற்படுகின்றதோ. அந்தந்த ஸமயங்களில் துக்கம் அவசியம் உண்டென்கிற நிச்சயமிருப்பதால் நித்யாநந்தஸ்வரூபனாய் விளங்கும் ஆத்மாவுக்கு சரீரத்தை ஸ்வீகரிப்பதால்

தான் துக்கம் வருகின்றது. ஸ்வயமாக அவனுக்கு அற்பங் கூட துக்கமே கிடையாது.

சிஷ்:— ஆனந்தஸ்வரூபனான ஆத்மாவிற்கு சரீரபரிக்ரஹத்திற்கு யாது காரணம்?

குரு:— முன் செய்யப்பட்ட கர்மங்களோடுகூடிய பஞ்சீகிருத பூதங்கள்தான் காரணமாகின்றன. பூர்வகர்மஸம்பந்தமில்லாத பூதங்கள்மாத்திரம் காரணமல்ல. கேவலபூதங்கள் எங்குமிருப்பதால் அவைகளிலிருந்தும் சரீரம் உண்டாகிறதென்று கூறுவது ஸரியல்ல.

சிஷ்:— சுக்லசோணிதரூபங்களாய் ஆயிருக்கின்ற பஞ்சீகிருத பூதங்களே சரீரமாக ஆகின்றபடியால் அவ்வித பூதங்களே சரீரத்திற்குக் காரணமாகின்றனவென்று சொல்லவேண்டியிருக்க அதை விட்டுத் தாங்கள் மாறுதலாக பூர்வகர்மாக்களுடன் கூடியதென்று கூறுகின்றீர்களே! எது உண்மை?

குரு:— கர்மஸம்பந்தமில்லாமல் சுக்லசோணிதங்களால்மாத்திரம் சரீரமேற்படாது. ஆகையால் கர்மாவுடன் கூடியவைகளே சரீரோற்பத்திக்குக் காரணங்கள். பஞ்சபூதங்கள், தேசம், காலம் முதலியவைகள் எல்லாவற்றிற்கும் பொதுவாயிருப்பதால் விசித்ரமான பல கர்மாக்களால்தான் விசித்ரமான பல சரீரங்கள் உண்டாகின்றனவென்று கொள்ளவேண்டும். மண் என்பது கடம், சராவம் முதலான ஸகல கார்யங்களுக்கும் பொதுவாயிருந்தபோதிலும் குயவனுடைய வேலையின் வித்தியாஸத்தால் கடமென்றும், வாணை என்றும், தோண்டியென்றும் வெவ்வேறான பல கார்யங்கள் ஏற்படுகின்றன. இவ்விதம் தான் இங்கு திருஷ்டாந்தத்தில் கடம் முதலியவைகளுக்கு மண் உபாதான காரணம், குயவனுடைய வியாபாரமானது நிமித்தகாரணமாக எப்படி ஆகின்றதோ, அவ்விதம் அங்கும் சரீரத்திற்கு பஞ்சீகிருதபூதங்கள் உபாதான காரணங்கள் அந்த கர்மா நிமித்தகாரணமாகின்றது. ஆகையால் போகத்தைக் கொடுக்கும் கர்மா இருந்தால் சரீரபரிக்ரஹம் ஏற்படும். ஜாக்ரத்ஸ்வப்னவஸ்தைகளில் கர்மாவிருப்பதால் சரீரத்தை யடைகிறான். கர்மா இல்லாதபடியால் ஸுஷுப்தியவஸ்தையில் சரீரமில்லை. மேலும், எப்படி மண் இருந்தாலும் குயவ

னுடைய வியாபாரமில்லாவிட்டால் கடம் உண்டாகிறதில்லை யோ, அவ்விதம் பகவானல் ஸிருஷ்டிக்கப்பட்ட பஞ்சபூதங்க ளிருந்தாலும் ஆத்மஞானத்தால் பூர்வகர்மாக்கள் நாசத்தை யடைந்த ஞானிக்குச் சரீரம் உண்டாகிறதில்லை.

சிஷ்:— கர்மசாஸ்திரத்தில்

अवश्यमनुभोक्तव्यं कृतं कर्म शुभाशुभम् ।
नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि ॥

அவச்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம் ।
நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி ॥

நம்மால் செய்யப்பட்ட கர்மாக்கள் பாபகர்மாவோ அல்லது புண்யகர்மாவோ, எவ்விதமிருந்தாலும் அவைகளின் பலத்தை அவச்யம் அனுபவித்தே தீரவேண்டும். கோடிக்கணக்கான வர்ஷங்கள் ஆனாலும் பலத்தைக் கொடுக்காமல் கர்மா நாசத் தையடையாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஞானசாஸ்திரத்தில்

ज्ञानाग्निस्सर्वकर्माणि भस्मसात्कुरुतेऽर्जुन ।

ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதேऽர்ஜுந ॥

ஹே அர்ஜுன! ஞானக்னியானது ஸகல கர்மாக்களையும் தகித்துச் சாம்பலாகச் செய்கின்றதென்று ஸ்ரீ பகவான் கூறி யிருக்கிறுர். இவ்விரண்டு வசனங்களும் ஒன்றுக்கொன்று முறண்படுகிறபடியால் எப்படித் தீர்மானிக்கிறது?

குரு:— சாஸ்திரத்தில் பிரபலவசனமென்றும், துர்பலவசன மென்றும் இரண்டுவிதமிருக்கின்றது. அவைகளில் பலமான வசனமே ஸித்தாந்த வசனமாகும். துர்பலமான வசனத் திற்குப் பூர்வபக்ஷவசனமென்று பெயர். பலமான வசனத் தால் துர்பலவசனம் பாதிக்கப்படும். அதெங்ஙனமென்றால்

अहिंसा परमो धर्मः । அஹிம்ஸா பரமோ தர்ம: ।

ஹிம்ஸை செய்யாமலிருப்பதே சிறந்த தர்மமாகும் என்கிற இந்த வசனம் பலமுள்ளதாகவிருந்தாலும்

यागे पशुवधः कर्तव्यः । யாகே பசுவத: கர்தவ்ய: ।

யாகத்தில் பசுவதம் செய்யவேண்டும் என்கிற அதிக பலமான இந்த வசனத்தால் அதுபாதிக்கப்படுவதுபோல அவச்யம் அனுபவிக்கவேண்டுமென்கிற துர்பலவசனமானது

तपसा किल्बिषं हन्ति | தபஸா கில்பிஷம் ஹந்தி ।

தவத்தால் பாபத்தைப் போக்குகிறான் என்கிற பிரபலவசனத்தால் பாதிக்கப்படுகின்றது. ஆகையால் முன்செய்யப்பட்ட கர்மாக்கள் பலவிருப்பினும் ஆத்மஞானத்தால் அவைகள் நாசத்தையடைந்துவிடுகின்றன. கர்மா இல்லாவிட்டால் ஜன்மாவுமில்லை; ஜன்மா இல்லாவிட்டால் துக்கமில்லை; துக்கமில்லாவிட்டால் ஆநந்தமுண்டாகிறது என்று சாஸ்திரங்களின் ஸித்தாந்தம். சுபம். உபபத்திராதிபர்.

நான்காவது வர்ணகம் முற்றிற்று.

---

திருச்சி சேலம் கிராமப்பஞ்சாயத்து தர்மகைங்கர்ய பஞ்சாயத்து ஆபீஸர் மகா-ள-ள-ஸ்ரீ ராமசேஷய்யர் அவர்கள் முன்பாக துரையூர்கிராமம் ராமகிருஷ்ண பஜனைமடத்தில் 24—12—28ல் காலை சுமார் 9-மணிக்குத் துரையூர்கிராம மஹாஜனங்கள் கூடிச் செய்த தீர்மானங்கள்.

1. நம் ஊருக்குக் கும்பகோணம் காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் விஜயம் செய்து, நமக்கு உபதேசம்செய்தபடி கோவில், குளங்களையும், பஜனைவகையராக்களையும் ஸரிவர நடத்திவருவதாக ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

2 நாம் எல்லோரும் பிரதிதினமும் ஏதாவது ஒரு ஆலயத்துக்குப்போய் ஸ்வாமிதர்சனம் செய்யாமல் இராவுபோஜனம் செய்கிறதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

3. இவ்வூருக்கு மகா-ள-ள-ஸ்ரீ மாப்பிள்ளை ரெங்கசாமி அய்யர் அவர்களால் தர்மத்திற்காகக் கட்டிவைத்து, சில வருஷ காலம் நடந்துவந்த பஜனையை ஷையார் பொதுக்கட்டிடத்திலேயே இனி விமரிசையாக நடத்திவரத் தீர்மானிக்கப்பட்டது.

4. இப்பொழுது பிரதிதினம் நடக்கும் வேதாத்யயனத்தை ஷை பஜனைமடத்திலேயே நடத்திவரத் தீர்மானிக்கப்பட்டது.

5. இப்பொழுது நடக்கும் வேதாத்தியயனத்துக்கு ஊரில் இருக்கும் ஸகல பிராமணர்களும், பிராமணக்குழந்தைகளும் வரவேணுமாய் வற்புறுத்தவேணுமாகத்தீர்மானிக்கப்பட்டது.

6. பிராமணச் சிறுகுழந்தைகளுக்கு ஸந்தியாவந்தனம் முதலிய நித்யகர்மானுஷ்டான மந்திரங்களையும், ஸ்தோத்திரங்

களையும், ஸம்ஸ்கிருதபாஷையையும் சொல்லிக்கொடுக்கத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

7. இந்த ஏற்பாடுகளையும் பிராம்மணஸமூஹ்தர்ம அபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து நடத்த இதின் அடியில் கண்ட கனவான்களைக் கமிட்டிமெம்பர்களாக வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

1. மகா-ள-ள-ஸ்ரீ அநந்தசாமிசாஸ்திரிகள் அவர்கள்,
2. ,, சேஷய்யர் அவர்கள்,
3. ,, திருமாநிலையூர் ராமஸ்வாமி அய்யரவர்கள்,
4. ,, கோதண்டராம சர்மா அவர்கள்,
5. ,, சாம்பசிவசாஸ்திரிகள் அவர்கள்,
6. ,, லெக்ஷ்மணய்யர் அவர்கள்,
7. ,, K. N ராமஸ்வாமி அய்யர் அவர்கள்,
8. ,, கோபாலய்யர் அவர்கள்,
9. ,, வைத்தினாதசாஸ்திரிகள் அவர்கள்.

ஷை கமிட்டிக்கு மகா-ள-ள-ஸ்ரீ அநந்தசாமிசாஸ்திரிகள் அக்ராசனாதிபதியாகவும், மகா-ள-ள-ஸ்ரீ வி. பி. வைத்தினாதசாஸ்திரிகள் அவர்களைக் காரியதரிசியாகவும் இருக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

8. இந்த ஸபைக்குத் தர்மகைங்கர்யஸபை என்று பெயர் இடலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

9. இதுஸங்கதியைப்பற்றி ஸ்ரீ ஆசாரியாரவர்களுக்கு அடிக்கடி விக்ஞாபனம் செய்துகொண்டு மடத்தில் வெளிவரும் பத்திரிகைகளையும், உபந்யாஸங்களையும் இந்த ஸபைக்கு இனாமாக அனுப்பித்துக்கொடுக்கவேணுமாய் விக்ஞாபனம் செய்துகொள்ளலாமாகத் தீர்மானிக்கப்பட்டது.

10. இந்த ஸபையில் பிரதிமீ நடந்துவரும் வேலைகளைப்பற்றி சரித்திரச்சுருக்கம் ஷை மடத்தாரவர்களுக்கு அனுப்பிவரத் தீர்மானிக்கப்பட்டது.

(Signed) அனந்தசாமிசாஸ்திரிகள் வகையரா 63 பேர்கள் கையெழுத்து செய்திருக்கிறார்கள்.

---

குறிப்பு:— ஷை பஜனைமடத்தை ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் பார்வையிட்டு ஷை மடத்தை ரெங்கய்யர் குமாரர்களே வம்சபாரம்பர்யமாய் தர்மங்களை விடாமல் நடத்திவரவேணுமாய் ஆக்ஞாபிக்கப்பட்டது.

# ஸந்தியாவந்தனம்.

(604-வது பக்கத்தொடர்ச்சி)

गायत्रीं तु परित्यज्य योऽन्यमन्त्रमुपासते ।
मण्डूकरावास्ते ज्ञेयाः इति वेदविदो विदुः ॥

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌤𑍁 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌰𑌾𑌵𑌾𑌸𑍍𑌤𑍇 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ।

இவ்வித காயத்ரீமந்திரத்தைவிட்டு வேறு மந்திரங்களை உபாஸித்தால் அவைகளை உச்சரிக்கும்பொழுது உண்டாகும் சப்தமானது மழைகாலத்தில் கத்தும் தவளைகளின் சத்தத்துக்கு ஒப்பாகும் என்று வேதமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

एकाहं जपहीनश्च सन्ध्याहीनो दिनत्रये ।
द्वादशाहमनग्निश्च शूद्र एव न संशयः ॥

𑌏𑌕𑌾𑌹𑌂 𑌜𑌪𑌹𑍀𑌨𑌶𑍍𑌚 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋 𑌦𑌿𑌨𑌤𑍍𑌰𑌯𑍇 ।
𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌮𑌨𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰 𑌏𑌵 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ।

ஒருநாள் ஜபம் செய்யாவிட்டாலும், மூன்றுநாள் தொடர்ந்தாற்போல் ஸந்தியாவந்தனம் செய்யாவிட்டாலும், பன்னிரண்டுநாள் சேர்ந்தாற்போல் ஔபாஸனம் செய்யாவிட்டாலும் சூத்திரனாகிறான். இதில் ஸந்தேஹமில்லை.

மேலும் ஜபத்தைச் செய்யுங்கால் உதடுகள்கூட அசையாமலும், பிறர் காதுகளுக்கு எட்டாமலும், மிகவும் ரஹஸ்யமாகச் செய்யவேண்டும். எதுவும் ரஹஸ்யமாகச் செய்தால்தான் அதிகப் பலனுண்டு. விதைகளைப் புதைத்து ரஹஸ்யமாக பூமியில் மூடி வைக்காமலிருந்தால் அது மரமாக முளைக்குமோ? அதனால்தான் ஒவ்வொரு உபதேசத்தின் முடிவிலும்

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।

𑌇𑌤𑌿 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌯𑌾𑌨𑌘 ।

'இப்பேர்ப்பட்ட மிகவும் ரஹஸ்யமான சாஸ்திரத்தை உனக்கு உபதேசித்திருக்கிறேன்' என்று முடிவுரையாகக் கூறப்படுகிறதல்லவா? இதை ரஹஸ்யமாக உச்சரிக்கவேண்டும் என்பதுமாத்திரமல்ல. அயோக்யர்களுக்கும் உபதேசம் செய்யலாகாது. அப்படி

யிருக்க இதில் அதிகாரமில்லாதவர்கள் ஜபிக்கலாகாது என்று சொல்லுதலும் வேண்டுமா? எப்படி தாசில்தார், என்ற அதிகாரம் இருந்தால்தான் தாசில்தாரின் பவர்களைச் செலுத்தப் பிரயோஜனப்படுமோ, அப்படியே பிராம்மண்யம் என்ற அதிகாரம் பெற்றிருந்தால்தான் காயத்ரீஜபத்தின் பவர் பிரயோஜனமாகும். தற்காலத்தில் எல்லாருக்கும ஈசுவரன் வாயைக் கொடுத்திருக்கிறான். எல்லாரும் எல்லாவற்றையும் உச்சரிக்கலாம். பிராம்மணர்தான் உச்சரிக்வேண்டும் என்பது பார்ப்பனர்களின் சூழ்ச்சியேதவிர வேறல்ல என்று பலர் கூக்குரலிடுகிறார்கள். அது மிகவும் தப்பான அபிப்பிராயமென்றும், எல்லாம் வல்ல இறைவனின் ஆக்ஞையைக கடைப்பிடித்தே எல்லாரும் ஒழுகவேண்டும் என்பதை ஒரு சிறு கதையால் விளக்குவோம்.

ஓர் ஊரில் பிராம்மணரல்லாத் ஒரு ஜமீன்தார் இருந்தார். அவருடைய ஹெட்குமாஸ்தா தினந்தோறும் ஆபீஸுக்கு நேரம் கழித்து வருவதைக் கவனித்து நேரமானதின் காரணத்தை வினவினர். காயத்ரீஜபம் செய்துவிட்டு வருகிறபடியால் நேரமாகிறதென்றும் அதற்காக மன்னிக்கும்படிக்கும் குமாஸ்தா தெரிவித்துக்கொண்டார். உடனே ஜமீன்தர்ர் "அப்பேர்ப்பட்ட காயத்ரீயைச் சொல்லும் நாமும் கெட்போம்" எனவே குமாஸ்தா "ஐயா! அதை மூன்று வர்ணத்தார் தான் உச்சரிக்கலாம். தங்களுக்குச் சொல்லும் பக்ஷத்தில் சுருதியை மீறி நடந்ததாகும். ஆகையால் தயவு செய்து மன்னிக்கவேண்டும் என்றார். ஜமீன்தார் ஈசுவரன் எல்லாருக்கும் வாயைத் தந்திருக்கிறான். நீர் சொல்வது மிகவும் விந்தையாயிருக்கிறது. நாளையதினத்திற்குள் இவ்விஷயத்தை நமது பிரஜைகளுக்கு எதிரில் திருப்திகரமாய் நிரூபணம் செய்துகாட்டாவிடில் உத்யோகபதவியிருந்து விலகவேண்டும்" என்று உத்திரவிட்டார். என்ன செய்வார் காயத்ரீஜபம் செய்து வரும் பிராம்மணன்! மறுநாள் பெரியதர்பார் எற்படுத்தப்பட்டது. ஜமீன்தாரின் குடிகள் திரள்திரளாகக் கூடியிருந்தனர். ஜமீன்தாரும் தமது ஆஸனத்தில் அமர்ந்தனர். குமாஸ்தாவும்

गायन्तं त्रायते यस्माद्गायत्रीत्युच्यते बुधैः ।

காயந்தம் த்ராயதே யஸ்மாத் காயத்ரீத்யுச்யதே புதை: ।

தன்னைக் கானம்செய்பவர்களைக் காத்தருள்வதால்தான் காயத்ரீ என்று பெயர். ஆகையால் காயத்ரீதேவி தன் நாமதேயத்திற்

கேற்றபடி நம்மைக் காப்பாற்றுவாள்' என்று நம்பி தர்பாருக்கு வந்தார். ஜமீன்தாருக்கு அருகில் கைகட்டி வாய்பொத்தி நிற்கும் சேவகனைக்கூப்பிட்டு, ஜமீன்தாரைத் தன் விரலால் சுட்டிக்காட்டி "அடே! இவரைப்பிடித்து வெளியே தள்ளு" என்று சொன்னார். அச்சேவகன் குமாஸ்தாவின் வார்த்தையைக்கொண்டு ஜமீன் தாரை அவ்வாறு செய்வானா? குமாஸ்தா பலதடவை அப்படிச் சொல்லியும் அவன் சும்மாவிருப்பதைக்கண்டு ஜனங்களை நோக்கி "இச்சேவகனிடம் நான் சொன்னதைமாத்திரம் குறித்துக்கொள் ளுங்கள்" என்றார். இத்தருணத்தில் குமாஸ்தா தன் விஷயத்தை நிரூபணம் செய்யவில்லையென்று ஜமீன்தார் கோபித்துத் தன் சேவகனைக் கூப்பிட்டு, குமாஸ்தாவைச் சுட்டிக்காட்டி 'அடே! இவரைப்பிடித்து வெளியே தள்ளு' என்றார். இந்த வார்த்தை அவர் உதடுகளிலிருந்து வெளிவந்தவுடனே அச்சேவகன் குமாஸ் தாவை வெளியே தள்ளச்சென்றான். உடனே குமாஸ்தா ஜனங் களைப் பார்த்து ஜமீன்தார் சேவகனிடம் சொன்னதைக் குறிக்கச் சொன்னார். பிறகு ஜமீன்தாரிடம் விடைபெற்றுக்கொண்டு சொன்னதாவது, 'ஐயாநான் தங்கள்கட்டளையை இதோநிரூபித்து விட்டேன். 'அடே! இவரைப்பிடித்து வெளியே தள்ளு' என்ற ஒரே வாக்யமானது என் வாயிலிருந்து வந்தபோது இச்சேவகன் அம்மாதிரி செய்யாதபடியால் அது வீண் ஆயிற்று, அதே வாக் யம் தங்கள் வாயிலிருந்து வந்தவுடன் அவன் என்னைப்பிடித்துத் தள்ள வந்துவிட்டான் ஏன்? ஜமீன்தார் என்ற அதிகாரம் என் னிடம் இல்லையாதலால் அது பலிக்கவில்லை, அதுபோல் பிராம் மண்யம் என்ற அதிகாரம் தங்களிடம் இல்லையாதலால் காயத்ரீ வீணே ஆகும் என்பதற்கையமில்லை.' உடனே எல்லாரும் கர கோஷம் செய்தனர். ஜமீன்தாரும் உண்மையையுணர்ந்து மிக வும் ஸந்தோஷமடைந்து அக்குமாஸ்தாபதவியில் அவரை ஸ்திர மாகச்செய்து சிறந்த வெகுமதியையும் தந்தார்.

முற்கூறியபடி ஜபம் செய்தபிறகு உபஸ்தானம்செய்து திக் தேவதைகளுக்கும் பிரதக்ஷிணநமஸ்காரங்களைச் செய்து அவர்கள் நம்மைக்குறித்து 'நீ க்ஷேமமாய் இருக்கக்கடவது' என்று ஆசீர் வாதம் செய்வதற்காக நம் கோத்திரம் முதலியவைகளைத் தெரி வித்துக்கொண்டு (அபிவாதனம் செய்து) பிறகு எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்.

சங்கை:— சுருதிகளில் உதயமாகும்போதும், அஸ்தமிக்கும்போதும் ஸூரியனை உபாஸிக்கவேண்டும் (ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும்)' என்றே கூறப்பட்டிருப்பதாலும் மத்யானத்தில் செய்யவேண்டும் என்பதற்கு சுருதியில்லையாதலாலும் மாத்யான்ஹிகம் எப்படி அனுஷ்டானத்தில் உளது?

ஸமாதானம்:—

अनन्ता वै वेदाः । அநந்தா வை வேதா: ।

என்று வேதங்கள் எண்ணிறந்தவை. அவ்வையாவற்றையும் எவரால்தான் அறியமுடியும்? எப்போது மாத்யான்ஹிகம் சிஷ்டர்களால் தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டுவருகிறதோ அதைக்கொண்டு அவ்விஷயமாகச் சுருதி இருந்தே தீரவேண்டும் என்று நாம் ஊகித்தறியவேண்டும். மேலும் ஸ்மிருதிகாரர்கள் சுருதியில் சொல்லப்படாததை ஸ்மிருதிகளில் கூறமாட்டார்கள். அவ்விஷயத்தில் ஸ்மிருதி என்ற பெயரே ஸாக்ஷியாகவிருக்கிறது. 'ஸ்மிருதி' என்பதற்கு ஞாபகம் என்று பொருள். நாம் முன்பின் பார்க்காத விஷயமாக நமக்கு ஞாபகம் வருமா? ஆகையால்

मौञ्जीबन्धनमारभ्य सायं प्रातश्च कालयोः ।
मध्याह्नेऽपि च कर्तव्यं यावत्प्राणविमोक्षणम् ॥
सन्ध्यात्रयं न कर्तव्यं यावन्मौञ्जी न बध्यते ।
सन्ध्यात्रयं तु कर्तव्यं सायमादि ततःपरम् ॥

மௌஞ்ஜீபந்தநமாரப்ய ஸாயம் ப்ராதஶ்ச காலயோ: ।
மத்யாஹ்நேऽபி ச கர்தவ்யம் யாவத்ப்ராணவிமோக்ஷணம் ॥
ஸந்த்யாத்ரயம் ந கர்தவ்யம் யாவந்மௌஞ்ஜீ ந பத்யதே ।
ஸந்த்யாத்ரயம் து கர்தவ்யம் ஸாயமாதி தத:பரம் ॥

பிராதஃகாலத்திலும், ஸாயங்காலத்திலும், மத்யான்ஹத்திலும் கூட ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும். உபநயனமானவுடன் 'மூன்றுமுறை ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும்' என்று ஸ்மிருதிகளில் எப்போது மூன்றுமுறை ஸந்தியாவந்தனம் செய்ய

வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதோ அதனால் அவ்விஷய மாக ஓர் சுருதி இருக்கவேண்டும் என்று அறியவேண்டும்.

மாத்யான்ஹிகத்தில் அர்க்கியப்பிரதானம்:— மந்தேஹாள் என்ற அஸுரர்கள் ஸந்திகாலங்களில்தான் ஸூரியகதியைத் தடைசெய்கிறார்கள். மத்யான்ஹத்தில் அவர்கள் அம்மாதிரி செய்கிறதில்லை. ஆகையால் மத்யானத்தில் அவர்களை நிக்ரஹம் செய்யவேண்டிய அவசியமில்லை. அதனால் ஒரேதடவைதான் அர்க்கியம் விடுகிறோம், மூன்றுமுறையல்ல. ஆனால் காயத்ரீமந்திரத்தினால் இரண்டுமுறை மத்யான்ஹத்திலும் அர்க்யம் கொடுப்பது ஸூர்யாந்தர்கத பகவானுக்கு அர்க்யத்தை உபலக்ஷணையாகக்கொண்டு ஷோடசோபசாரரூபமேயாகும்.

முடிவுரை:— இவ்வாறு முக்கிய விஷயங்களாகக் கருதப் பட்டவைமாத்திரம் மேலே விபரமாய்க் கூறப்பட்டன. மந்திரங்களின் அர்த்தம் முதலியவைகளை மற்றுமோர் முறை எழுதுவோம். எல்லா வைதிகசிரோமணிகளும் ஸந்தியாத்ரயங்களைக் கடைப்பிடித்தொழுகி திர்க்காயுளையும், பிரம்மவர்ச்சஸ்ஸையும் ஈசுவரானுக்ரஹத்தையும் பெற்று ஸுகமாய் இருப்பார்களாக.

டவுன் ஹைஸ்கூல்,
கும்பகோணம்.

சுபம்.

M. ராமராவ்,
உபாத்தியாயர்.

---

குறிப்பு:— இவ்விஷயம் புதுக்கோட்டை தஸராபண்டிதபரீக்ஷை பேரர்டாரின் ஆதரவில் பிரபவ-ஞு நவராத்திரியில் உபந்யாஸம் செய்யப்பட்டது.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ
...தைய

# ஓர் கண்டனக் கூட்டம்:

சென்னை முத்யால்பேட்டை வைதிகப்பெண்மக்களின் மஹாஸபை ஒன்று 23—11—29 மாலை 5-மணிக்கு தம்புசெட்டி வீதி 119-நெ. ஸ்ரீ சங்கரமடத்தில் கூடியது. ரிடைர்ட் டிப்டி கலெக்டர் ஏ. வேதாசலய்யரவர்கள் மனைவி ஸ்ரீமதி ஸுந்திரம்மாள் தலைமைவஹித்து விவாஹவயதுமசோதாவையும், ஸம்மதவயது மசோதாவையும்பற்றி விசாரிக்க வந்திருக்கும் கமிட்டியின் செய்கையையும் கண்டித்து விரிவாகப்பேசி ஸ்ரீமதி வக்கீல் நாகேஸ்வரய்யர் மனைவி பட்டம்மாளை தீர்மானத்தை ப்ரேரணை செய்யும்படி கோறினள்.

ஸ்ரீமதி ஷை மசோதாவைக்கண்டித்தும் சென்னைமாநகரில் ஸாக்ஷியம்கொடுத்த ஸ்ரீ பட்டவர்த்தநம்போன்றவர்கள் தங்களது ஆசாரசீர்திருத்தத்தை சென்னைப் பெண்மக்களின் அபிப்ராய மெனக்கூறியதை இக்கூட்டம் கண்டிக்கிறது. ஒரு சிலரைத் தவிர எல்லாப்பெண்களும் இதை எதிர்க்கின்றனர் எனப்ரேரேபித்தும் இதுவிஷயமாக விடாமுயற்சியுடன் வேலைசெய்யும் ஸ்ரீஜகத்குரு கும்பகோணம் ஸ்ரீ சங்காசாரியஸ்வாமிகள் பாதாரவிந்தங்களுக்கும் ஸ்ரீமான்களான தர்பங்காமஹாராஜா எம். கே. ஆசார்யர், வி. டி. ராமஸ்வாமி அய்யர், வெ. ஸோமதேவசர்மா முதலியவர்களுக்கு வந்தனம் கூறி, ஏகாந்தமாக 'ஸம்மதவயதுமசோதா கமிட்டியார் விசாரிப்பதைக் கண்டித்து 1-மணி உபன்யஸித்தார். அதை ஆதரித்து வக்கீல் ரங்கனதய்யர் மனைவி ஸ்ரீமதி ராஜம்மாளும் மற்றும் சிலரும் பேசத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. நூற்றுக்கணக்கான பெண்மக்கள் வந்திருந்தனர்.

த. வெங்கட்டராம தீக்ஷிதர்,
கீழ்ப்பந்தல்கிராமம்.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

---

उद्देशकः—

सार्धं तण्डुलमानकत्रयमहो द्रम्मेण मानाष्टकं
मुद्गानां च यदि, त्रयोदशमिता एता वणिकाकिणीः।
आदायार्पय तण्डुलांशयुगळं मुद्गैकभागान्वितं
क्षिप्रं क्षिप्रभुजो व्रजेमहि यतः सार्थोऽग्रतो यास्यति ॥

न्यासः— मूल्ये, 1, 1, पण्ये, $\frac{7}{2}$, $\frac{8}{1}$, स्वभागौ, 2, 1, मिश्रधनं, $\frac{13}{64}$, अत्र मूल्ये स्वभागगुणिते, $1\times2=2$, $1\times1=1$, पण्याभ्यां भक्ते जाते, $2\div\frac{7}{2}=\frac{2\times2}{7}=\frac{4}{7}$, $1\div8$, $=\frac{1}{8}$, अनयोर्योगेन, $\frac{4}{7}+\frac{1}{8}=\frac{39}{56}$

अनेन एत एव, $\frac{4}{7}$, $\frac{1}{8}$, भागौ च, $\frac{2}{1}$, $\frac{1}{1}$, मिश्रधनेन $\frac{13}{64}$, संगुण्य भक्ते जाते तंडुलमुद्गमूल्ये, $\frac{1}{6}$, $\frac{7}{192}$, तथा तंडुलमुद्गभागाः, $\frac{7}{12}$, $\frac{7}{24}$, अत्र तंडुलमूल्ये पणौ, 2, काकिण्यौ, 2, वराटकाः, 13, वराटकभागश्च, $\frac{1}{3}$, मुद्गमूल्ये, काकिण्यौ, 2, वराटकाः, 6, भागौ च, $\frac{2}{3}$,

क्रयविक्रय इति— विपणिसमयेन क्लृप्तमानमूल्यानां पण्यानामेकद्वित्र्यादिभागशः मिश्रधनात्क्रयणे तेषां स्वस्वमूल्यानि विविच्यन्ते यत्र तादृशे क्रयविक्रय इत्यर्थः। तदुक्तं कर्मप्रदीपिकायाम्— "नानाविधानि द्रव्याणि क्रीयन्ते यत्र भागशः। पृथङ्मिश्रधनात्तेषां धनं स्वं स्वं विभज्यते" इति। अत्र वणिग्भ्यो जनैर्दीयमानं यद्वराटकादिकं तन्मूल्यम्। वणिग्भ्यो जनैरुपादीयमानं तंडुलमुद्गादिकं यत्तत्पण्यम्। तत्र, पण्यानि= पण्ये च पण्यानि च पण्यानि, यत्र पण्यद्वयमुदाहृतं तत्रापि सूत्रव्याप्त्यर्थमित्थं विग्रहः कृतः। अत एवात्र तथाविधमुदाहरणद्वयं दर्शितम्। तैः पण्यैः, स्वमूल्यानि=यथास्वं कल्पितानि मूल्यानि। अत्रापि स्वमूल्ये च स्वमूल्यानि च स्वमूल्यानीति विग्रहः। तानि, स्वभागैः=पण्यभागैः, यथोदितैः, हत्वा=संगुण्य, पण्यैर्भजेत्। तत्तत्पण्यस्य यानि मूल्यानि तानि स्वभागैर्हत्वा तत्तत्पण्यमूल्यसंख्यया विभजेदिति यावत्। तत्र लब्धमिष्टभागस्य मूल्यं भवति। एवं सर्वेषां पण्येष्टभागानां पृथङ्मूल्यमानीय पृथक्स्थाप्यम्। तानि च=मूल्यानि च, भागांश्च=तत्तत्पण्यभागांश्च

मिश्रेण धनेन, हत्वा, तदैक्येन = तेषां पृथक्स्थापितानामिष्टभागमूल्यानामैक्येन योगेन, भजेत् । यथाक्रमं, मूल्यानि पण्यानि च स्युः । मिश्रधनहते इष्टभागमूल्ये इष्टभागमूल्ययोगभक्ते मूल्यं मिश्रधनखण्डात्मकं भवति । मिश्रधनहते पण्यभागे इष्टभागमूल्ययोगभक्ते पण्यभागश्च भवतीति यावत् । पण्यद्वयोदाहरणे पण्याभ्यां स्वमूल्ये भजेदित्यादि बोध्यम् । तादृशमुदाहरणमाह— सार्धमिति— अहो ! वणिक् !! द्रम्मेण एकेन, सार्धं = अर्धसहितं, तंडुलमानकत्रयं = तंडुलानांम्मानत्रयं, मानशब्देन द्रोणाढकादीनां परिभाषोक्तानामन्यतमं ग्राह्यम् । लभ्यते यदि । तथा, एकद्रम्मेण मुद्गानां मानाष्टकं च, तदा एताः = पण्यक्रयणार्थं दित्सिताः, त्रयोदशमिताः, काकिणीः = द्रम्मचतुष्षष्ट्यंशरूपाः । आदाय = स्वीकृत्य, तंडुलांशयुगलं = तण्डुलानां भागद्वयं, मुद्गैकभागान्वितं मुद्गानामेकभागसहितं यथाभवति तथा । क्षिप्रमर्पय = शीघ्रं देहि । क्षिप्रभुजस्सन्तो वयं व्रजेमहि = गच्छेम किल, यतः यस्मात्कारणात् । सार्थः = सहायसंघः, अग्रे यास्यति ॥ अत्र पण्यं सार्धं तंडुलमानकत्रयं, $\frac{7}{2}$, तस्य मूल्यं द्रम्मः, $\frac{1}{1}$, तथा मुद्गमानाष्टकं, 8, पण्यम् । तस्य मूल्यं द्रम्म एव । आदित्सितौ तण्डुलभागौ, 2, मुद्गभागः, 1, अत्र तंडुलमूल्यं स्वभागाभ्यां संगुण्य तण्डुलेन पण्येन, $\frac{7}{2}$, अनेन विभजेत्, $\frac{1\times2\times2}{7}=\frac{4}{7}$, लब्धमिदं उद्दिष्टतंडुलभागद्वयमूल्यम् । तथा मुद्गमूल्यं स्वभागेन संगुण्य मुद्गेन पण्येन विभजेत्, $\frac{1\times1}{8}=\frac{1}{8}$, इदं मुद्गभागमूल्यम् । सवर्णीकृतयोरनयो र्योगः, $\frac{4}{7}+\frac{1}{8}=\frac{39}{56}$, अनेन मिश्रधनगुणिते तंडुलमुद्गभागमूल्ये भजनीये । अत्र समजातित्वाय त्रयोदशकाकिण्यात्मकं मिश्रधनं द्रम्मतां प्रापय्य क्रिया कार्या । तथा च द्रम्मत्वं प्रापितेन मिश्रधनेन, $\frac{13}{64}$, अनेन, तंडुलभागमूल्ये, $\frac{4}{7}$, अस्मिन् गुणिते तंडुलमुद्गभागमूल्ययोगेन, $\frac{39}{56}$, अनेन भक्ते, $\frac{4}{7}\times\frac{13}{64}\div\frac{39}{56}=\frac{4\times13\times56}{7\times64\times39}=\frac{1}{6}$. लब्धमिदं आदित्सिततंडुलभागमूल्यम् । तथा तेन मिश्रधनेन मुद्गभागमूल्ये गुणिते उक्तमूल्ययोगेन भक्ते

$\frac{1}{8} \times \frac{13}{64} \div \frac{39}{56} = \frac{1 \times 13 \times 56}{8 \times 64 \times 39} = \frac{7}{192}$, लब्धमिदं मुद्गभागमूल्यम् ।

तथा तंडुलभागे मिश्रधनहते मूल्ययोगभक्ते, $\frac{2}{1} \times \frac{13}{64} \div \frac{39}{56} = \frac{2 \times 13 \times 56}{1 \times 64 \times 39}$ $= \frac{7}{12}$, लब्धमिदं तंडुलभागद्रव्यम् । तथा मुद्गभागे मिश्रधनहते मूल्ययोगभक्ते, $\frac{1}{1} \times \frac{13}{64} \div \frac{39}{56} = \frac{1 \times 13 \times 56}{1 \times 64 \times 39} = \frac{7}{24}$, लब्धमिदं मुद्गभागः । अत्रोपपत्तिस्त्रैराशिकैः, यथा—यदि तंडुलानां सार्धमानत्रयस्य द्रम्मो मूल्यं, तदा मानद्वयस्य किमिति त्रैराशिकेनाभीप्सिततंडुलभागद्वयमूल्यं लभ्यते। तथा यदि मुद्गानां मानाष्टकस्य द्रम्मो मूल्यं, तदा एकमानस्य किमिति मुद्गभागमूल्यं लभ्यते । अत उक्तं "पण्यैः स्वमूल्यानी"त्यादि । एवं लब्धयोर्मूल्ययोर्योगेन यदि पृथक्पृथगेते मूल्ये इष्टपण्यमाने च लभ्येते, तदोद्दिष्टमिश्रधनेन कियन्ति तानीति त्रैराशिकैः पृथक्पृथङ्मूल्ये इष्टपण्यमाने च लभ्येते अत उक्तं "तदैक्येन भजेच्चतानी"त्यादि । एवं त्रैराशिकैरिदमुपपन्नम् । त्र्यादिपण्येष्वप्येवमेव योजनीयम् । एतत्सूत्रसूचितमित्युक्तमेव ॥ ॥ ९५ ॥

उदाहरणम्—

कर्पूरस्य वरस्य निष्कयुगले नैकं पलं प्राप्यते
वैश्यानन्दनचन्दनस्य च पलं द्रम्माष्टभागेन चेत् ।
अष्टांशेन तथाऽगरोः पलदलं, निष्केण मे देहि तान्
भागैरेकषोडशाष्टकमितैर्धूपं चिकीर्षाम्यहम् ॥ ९६ ॥

न्यासः— मूल्यानि द्रम्माः, 32, $\frac{1}{8}$, $\frac{1}{8}$, पण्यानि, 1, 1, $\frac{1}{2}$, भागाः, 1, 16, 8, मिश्रधनं द्रम्माः, 16, लब्धानि कर्पूरादीनां मूल्यानि, $14\frac{2}{9}$, $\frac{8}{9}$, $\frac{8}{9}$; तथा तेषां पण्यानि, $\frac{4}{9}$, $\frac{64}{9}$, $\frac{32}{9}$,

उदाहरणमिति—पण्यत्रयोदाहरणमित्यर्थः । हे वैश्यानन्दन = वैश्यजातिस्त्री वैश्या तस्याः पुत्र! वरस्य = श्रेष्ठस्य अपक्वस्येति यावत् । कर्पूरस्य = तदाख्यपण्यस्य, एकं पलं, निष्कयुगळेन = द्वात्रिंशद्द्रम्मैरित्यर्थः । प्राप्यते चेत्, त्रिपणिसमयेनेति बोध्यम् । चन्दनस्य च पलं द्रम्माष्टभागेन

प्राप्यते चेत्, तथा अगरोः, पलदलं = अर्धपलं, अष्टांशेन = द्रम्माष्टभागेन प्राप्यते चेत्, तदा, निष्केण–षोडद्रम्मैरित्यर्थः । तान् = कपूरादीन् क्रमेण एककषोडशाष्टकामितैर्भागैः, मे देहि । एतैरहं धूपं कर्तुमिच्छामि । इद- मुपलक्षणं मुस्तागुग्गुल्वादीनाम्, तेषामपि धूपसंयोगिद्रव्यत्वात् । सम- जातित्वाय निष्कयुगलं द्रम्मीकृतमिति सूचयितुं न्यासे द्रम्मा इति । "पण्यैस्स्वमूल्यानी"त्युक्तविधिना क्रिया प्रदर्श्यते । पण्यमूलानि, 32, $\frac{1}{8}$, $\frac{1}{8}$ स्वस्वभागगुणितानि, $32\times1=32$, $\frac{1}{8}\times16=2$, $\frac{1}{8}\times8=1$, स्वस्वपण्यभक्तानि $32\div1=32$, $2\div1=2$, $1\div\frac{1}{2}=2$, जातानि । एतेषां योगेन, $32+2+2=36$, अनेन मिश्रधनगुणितेषु पूर्वानीतफलेषु भक्तेषु $\frac{32\times16}{36}=\frac{128}{9}$, इदं कर्पूरभागमूल्यम् । $\frac{2\times16}{36}=\frac{8}{9}$, इदं चन्दन भागमूल्यम् । $\frac{2\times16}{36}=\frac{8}{9}$ इदमगरुभागमूल्यम् । एतेषां योगे $\frac{128}{9}+\frac{8}{9}+\frac{8}{9}=\frac{144}{9}=16$, षोडशद्रम्मात्मकनिष्कोभवति । तथा मिश्रधनगु- णितेषु कर्पूरादीनां भागेषु कर्पूरादिभागमूल्ययोगभक्तेषु क्रमेण तेषां प्रोक्ता भागा लभ्यन्ते । यथा, $\frac{1\times16}{36}=\frac{4}{9}$, अयं कर्पूरभागः । $\frac{16\times16}{36}=\frac{64}{9}$, अयं चन्दनभागः षोडशमितः । $\frac{8\times16}{36}=\frac{32}{9}$, अयमगरुभागोऽष्टमितः । पूर्वोक्तरीत्यैवोपपत्तिर्बोध्या ॥ ॥ ९६ ॥

रत्नमिश्रे करणसूत्रं वृत्तम्—

नरघ्नदानोनितरत्नशेषैरिष्टे हृते स्युः खलु मूल्यसंख्याः ।
शेषैर्हृते शेषवधे पृथक्स्थैरभिन्नमूल्यान्यथ वा भवन्ति ॥९७॥

अत्रोद्देशकः—

माणिक्याष्टकमिन्द्रनीलदशकं, मुक्ताफलानां शतं
सद्वज्राणि च पञ्च, रत्नवणिजां येषां चतुर्णां धनम् ।
सङ्गस्नेहवशेन ते निजधनाद्दत्त्वैकमेकं मिथो
जातास्तुल्यधनाः, पृथग्वद सखे तद्रत्नमूल्यानि मे ॥९८॥